இயல் நான்கு

# கல்வி கரையில




## கற்றல் நோக்கங்கள்

- *நீதி நூல்களைப் படித்து அறக்கருத்துகளை வாழ்வில் பின்பற்றுதல்*
- *திரையிசைப் பாடல்களில் உள்ள நற்கருத்துகளை அறிந்து கொள்ளுதல்*
- *பல்துறைக் கல்வி பற்றி அறிந்து, கற்று வாழ்வில் உயர்தல்*
- *வாழ்க்கை நிகழ்வுகள் மூலம் வாழ்வியல் விழுமியங்களை அறிதல்*
- *பொருள் வேறுபாடுகளை உணர்த்துவதில் வேற்றுமை உருபுகளின் பங்கினை அறிந்து பயன்படுத்துதல்*



8th Std Tamil _20-12-2019.indd 69 03-01-2020 19:34:37

கவிதைப்பேழை

# இயல் நான்கு

# கல்வி அழகே அழகு

T5G8WK




மனிதர்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ள எண்ணற்ற அணிகலன்களைப் பயன்படுத்துகின்றனர். அவை தங்கம், வெள்ளி போன்ற விலைமதிப்பு மிக்க உலோகங்களால் செய்யப்பட்டவையாக உள்ளன. ஆனால் மனிதனுக்கு அழகையும் உயர்வையும் தரக்கூடிய உண்மையான அணிகலன் எது என்பதைக் கூறும் நீதிநெறி விளக்கப்பாடல் ஒன்றை அறிவோம்.

*கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்*

–குமரகுருபரர்

### சொல்லும் பொருளும்

கலன் – அணிகலன்

முற்ற – ஒளிர

### பாடலின் பொருள்

ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை. அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

### நூல் வெளி





குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. இந்நூலின் பதின்மூன்றாம் பாடல் நமக்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது.



8th Std Tamil _20-12-2019.indd 70 03-01-2020 19:34:37

## கற்பவை கற்றபின்

1. கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.
2. கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம்பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.
3. பின்வரும் நாலடியார் பாடலைப் படித்துச் சுவைக்க.

*கல்வி கரையில கற்பவர் நாள் சில*
*மெல்ல நினைக்கின் பிணி பல – தெள்ளிதின்*
*ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்*
*பாலுண் குருகின் தெரிந்து*

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கற்றவருக்கு அழகு தருவது ________.

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

2. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்

இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. அழகு ________________________________________
2. கற்றவர் ________________________________________
3. அணிகலன் ________________________________________

**குறுவினா**

யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

**சிறுவினா**

நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**சிந்தனை வினா**

கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.



8th Std Tamil _20-12-2019.indd 71 03-01-2020 19:34:38

கவிதைப்பேழை

இயல் நான்கு

# புத்தியைத் தீட்டு

7QWLQ4

**நுழையும்முன்**

அறிவே ஆற்றல் என்பது ஆன்றோர் கூற்று. அறிவும் உழைப்புமே ஒரு மனிதனை வாழ்வில் உயரச் செய்யும். வன்முறையால் பிறரை வெல்வது சரியான செயலன்று. அறிவினாலும் அன்பினாலும் பிறரை வெல்லும் வெற்றியே நமக்குப் பெருமை தரும். இக்கருத்துகளை விளக்கும் பாடல் ஒன்றை அறிவோம்.

*கத்தியைத் தீட்டாதே – உந்தன்*
*புத்தியைத் தீட்டு*
*கண்ணியம் தவறாதே – அதிலே*
*திறமையைக் காட்டு!*

*ஆத்திரம் கண்ணை*
*மறைத்திடும் போது*
*அறிவுக்கு வேலை கொடு – உன்னை*
*அழித்திட வந்த*
*பகைவன் என்றாலும்*
*அன்புக்குப் பாதை விடு! (கத்தியைத்)*

*மன்னிக்கத் தெரிந்த*
*மனிதனின் உள்ளம்*
*மாணிக்கக் கோயிலப்பா – இதை*
*மறந்தவன் வாழ்வு*
*தடம் தெரியாமல்*
*மறைந்தே போகுமப்பா! (கத்தியைத்)*

*இங்கே இருப்பது சில காலம்*
*இதற்குள் ஏனோ அகம்பாவம்*
*இதனால் உண்டோ ஒரு லாபம் – இதை*
*எண்ணிப்பாரு தெளிவாகும்! (கத்தியைத்)*

*– ஆலங்குடி சோமு*

## சொல்லும் பொருளும்

தடம் – அடையாளம் அகம்பாவம் – செருக்கு



8th Std Tamil _20-12-2019.indd 72 03-01-2020 19:34:38

## நூல் வெளி

ஆலங்குடி சோமு திரைப்படப் பாடல் ஆசிரியராகப் புகழ்பெற்றவர். சிவகங்கை மாவட்டத்திலுள்ள ஆலங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

இவரது திரையிசைப்பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.



## கற்பவை கற்றபின்

*அறிவின் பெருமையை விளக்கும் பழமொழிகளைத் திரட்டுக.*

## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் _____ இன்றி வாழ்ந்தார்.

   அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி

2. 'கோயிலப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா

   இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா

3. பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) பகைவென்றாலும் ஆ) பகைவனென்றாலும்

   இ) பகைவன்வென்றாலும் ஈ) பகைவனின்றாலும்

*குறுவினா*

1. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
2. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?

*சிறுவினா*

புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

*சிந்தனை வினா*

உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?



8th Std Tamil _20-12-2019.indd 73 03-01-2020 19:34:38

உரைநடை உலகம்

## இயல் நான்கு

# பல்துறைக் கல்வி

B5KNXE

**நுழையும்முன்**

கேடில் விழுச்செல்வம் கல்வி. மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது கல்வி ஆகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அதைச் சீர்திருத்தி இட்டுச் செல்வதிலும் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. மனித ஆற்றலை மேம்படுத்தவும் பண்பாட்டினைக் காக்கவும் அறிவியலை வளர்க்கவும் நாட்டுப்பற்றை ஊட்டிடவும் சான்றோர் பலர் பெரிதும் முயன்றனர். அவ்வகையில் திரு.வி.க.வின் கல்விச் சீர்திருத்தச் சிந்தனைகளை அறிவோம்.



அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே இளமையில் கல் என்னும் முதுமொழி பிறந்தது.

### ஏட்டுக்கல்வி

இந்நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு



8th Std Tamil _20-12-2019.indd 74 03-01-2020 19:34:38

மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

### தெரிந்து தெளிவோம்

கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்.

– விஜயலட்சுமி பண்டிட்
ஐ. நா. அவையின் முதல் பெண் தலைவர்

### தாய்மொழி வழிக்கல்வி

நாம் தமிழ் மக்கள்; நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதல் முதல் தாய் மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறப்பது.

### தமிழ்வழிக் கல்வி

தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே; சிறப்பான அறிவியல் கலைகளில்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது? குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது. கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம். தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம் என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும்.

### காப்பியக் கல்வி

வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம். நாம் தமிழர்கள். நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் எங்குச் செல்லல் வேண்டும்? தமிழ் இலக்கியங்களுக்கிடையே அன்றோ? தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன. இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள். இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது. இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்! தமிழ் இன்பத்திலுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்.



8th Std Tamil _20-12-2019.indd 75 03-01-2020 19:34:38

## இயற்கைக் கல்வி



நீங்கள் ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலையங்களில் புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோடியைந்த வாழ்வு நடத்த வல்லவர்களாவீர்கள். காடு செறிந்த ஒரு மலை மீது ஏறி, ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள். இயற்கை ஓவியத்தைக் கண்டு கண்டு மகிழுங்கள். மண் வழங்கும் பரந்த பசுமையிலும் வெண்மையிலும் விண் வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள். காலையில் இளஞாயிறு, கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள்.

அருவி முழவும் குயில் குரலும் வண்டிசையும் மயில் அகவலும் மலர் மணமும் தேனினிமையும் தென்றல் வீசலும் புலன்களுக்கு விருந்தாகும் இயற்கை அன்னையைப் பாருங்கள். ஆங்கே சூழ்ந்துள்ள செடி, கொடி மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் உற்றுநோக்கி, சில செடிகள் பூமியில் பரந்தும் சில செடிகள் எழுந்து நின்றும் சில கொடிகள் சுருண்டு சுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சில மரங்கட்கு நீள் கிளையும் கிளிக்கு வளைந்த மூக்கும் யானைக்குத் துதிக்கையும் மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம்? என்று சிந்தியுங்கள்.

அந்தியில் ஞாயிறு அமருங் கோலத்தையும் பறவைகள் பறந்து செல்வதையும் கால்நடைகளின் மணியோசையையும் காணுங்கள்; கேளுங்கள். இவ்வாறு, இயற்கைக் கழகத்தில் பயின்றுபயின்று சங்கப்புலவர் இளங்கோ, திருத்தக்கத்தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கின்றனர் என்று ஆராயுங்கள். நந்தமிழ்க் காவியங்களும், ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் பேணுவதை உணர்வீர்கள்.

## இசைக்கல்வி

இன்றைய சூழலில் இசைப்பயிற்சியும் இன்றியமையாதது. இசை பாட இயற்கை சிலருக்குத் துணை செய்யும்; சிலர்க்குத் துணை செய்வதில்லை. அத்துணை பெறாதார் இசை இன்பத்தையாதல் நுகரப் பயில்வாராக. பழைய தமிழர் இசைத்துறையின் நிலை கண்டவர் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன். தமிழ் யாழையும் குழலையும் என்னென்று சொல்வது? அந்த முகரங்களை நினைக்கும் போதே அமிழ்தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர் தம் யாழ் மயக்குறச் செய்யுமாம். அந்த யாழ் எங்கே? இனி இசைப் புலவர்தொகை நாட்டிற்

### தெரிந்து தெளிவோம்

ஏடன்று கல்வி; சிலர் எழுதும் பேசும்
இயலன்று கல்வி; பலர்க் கெட்டா தென்னும்
வீடன்று கல்வி; ஒரு தேர்வு தந்த
விளைவன்று கல்வி; அது வளர்ச்சி வாயில்

– குலோத்துங்கன்



8th Std Tamil _20-12-2019.indd 76 03-01-2020 19:34:38

பெருகப் பெருக நாடு பல வழியிலும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே அத்துறை மீதும் மாணவர் கருத்துச் செலுத்துவாராக.

### நாடகக்கல்வி

நாடகக்கல்வி வாழ்விற்கு வேண்டா என்று யான் கூறேன். இடைக்காலத்தில் நாடகக் கலையால் தீமை விளைந்தபோது அதைச் சிலர் அழிக்க முயன்றதுண்டு. இப்போதைய நாடகம் நன்னிலையில்லை என்பதை ஈண்டு விளக்க வேண்டுவதில்லை. நாடகத்துக்கு நல்வழியில் புத்துயிர் வழங்க வேண்டும். நாடகத்தை நல்வழிப்படுத்தி மாணாக்கரை அதன்கண் தலைப்படுமாறு செய்யத் தமிழ்ப் பெரியோர் முயல்வாராக..

### அறிவியல் கல்வி



உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக்கலை. உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வேண்டும். இந்நாளில் இவைகளைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

### நூல் வெளி





திரு.வி.க. என்று அனைவராலும் குறிப்பிடப்படும் திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரனார் அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்; சிறந்த மேடைப் பேச்சாளர்; தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுபவர். இவர் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, பொதுமை வேட்டல், முருகன் அல்லது அழகு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவரது இளமை விருந்து என்னும் நூலிலிருந்து சிலபகுதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய தொகுப்புகளில் இடம்பெறும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.



8th Std Tamil _20-12-2019.indd 77 03-01-2020 19:34:38

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது _____.

   அ) விளக்கு   ஆ) கல்வி   இ) விளையாட்டு   ஈ) பாட்டு

2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ______.

   அ) இளமை   ஆ) முதுமை   இ) நேர்மை   ஈ) வாய்மை

3. இன்றைய கல்வி _____ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

   அ) வீட்டில்   ஆ) நாட்டில்   இ) பள்ளியில்   ஈ) தொழிலில்

**நிரப்புக.**

1. கலப்பில் _____ உண்டென்பது இயற்கை நுட்பம்.
2. புற உலக ஆராய்ச்சிக்கு _____ கொழுகொம்பு போன்றது.
3. வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது _____ இன்பம் ஆகும்.

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. இயற்கை ஓவியம் | – | சிந்தாமணி |
| 2. இயற்கை தவம் | – | பெரியபுராணம் |
| 3. இயற்கைப் பரிணாமம் | – | பத்துப்பாட்டு |
| 4. இயற்கை அன்பு | – | கம்பராமாயணம் |

**குறுவினா**

1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?
2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
3. திரு. வி. க., சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

**சிறுவினா**

1. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.
2. அறிவியல் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?

**நெடுவினா**

காப்பியக் கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**சிந்தனை வினா**

திரு. வி. க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?



8th Std Tamil _20-12-2019.indd 78 03-01-2020 19:34:39

விரிவானம்

# இயல் நான்கு

# ஆன்ற குடிப்பிறத்தல்

LCCZIM

**நுழையும்முன்**

ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் உயர்த்துவதில் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. புதிய செய்திகளைக் கற்பது மட்டும் கல்வியன்று. மனிதனின் உள்ளத்தில் புதைந்துகிடக்கும் நற்பண்புகளை வெளிக்கொண்டு வருவதும் அவனது வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதும் கல்வியின் நோக்கங்களாகும். ஒரு மாணவனின் உள்ளத்தில் ஆசிரியர் விதைத்த விதை எவ்வாறு பயன் தந்தது என்பதை ஒரு நிகழ்வின் மூலம் அறிவோம்.




செய்யுள் வகுப்புகள் எனக்குச் சுவையானவை; பிள்ளைகளுக்கும் சுவையானவை.

சில நேரங்களில் சில வரிகளை நெடுநேரம் விவரிக்க நேரும்! வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி – என்பதையெல்லாம் சுலபமாக விளக்கிவிடலாம். "உண்மையுமாய் இன்மையுமாய்" என்பதையும் "யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு வானாகி நின்றாயை" என்பதையும் விளக்குவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகும்.

நான்காம் ஐந்தாம் வகுப்புகளில், அதிகாரத்துக்கு இரண்டாகச் சில திருக்குறள் பாக்கள் வரும். அவ்வாறு வந்த ஒரு திருக்குறளுக்குப் பொருள் கூற நான் சற்றுத் திண்டாடியதும், கடைசியில் அது சிறப்பாக நிறைவேறியதும் ஒரு சுவையான நிகழ்ச்சியாகும்.



8th Std Tamil _20-12-2019.indd 79 03-01-2020 19:34:39

அப்போது நான் ஒரு சிற்றூர்ப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வந்தேன். அதே ஊரில் ஓர் எளிய குடிசை வீட்டில் நானும் என் மனைவியும் வசித்து வந்தோம். நாங்கள் குடியிருந்த குடிசை வீட்டுக்கு உள் தாழ்ப்பாள் கூடக் கிடையாது. ஜாதிக்காய்ப் பலகையினால் ஆன ஓர் எளிய கதவை வெறுமனே சாத்தி, அது திறந்து கொள்ளாமல் இருக்க ஓர் இரும்பு நாற்காலியையும் நீர் நிறைந்த ஒரு இரும்பு வாளியையும் முட்டுக் கொடுத்து வைத்துவிட்டு, இரவில் உறங்கப்போவோம். சம்பள நேரமாயிருந்தால், பணப்பையைத் தலையணைக்கு அடியில் வைத்துத் தூங்கிவிடுவோம்.

ஒரு நாள் காலை, பள்ளி புறப்படும் முன்பு, எனது எட்டு முழ வேட்டியைத் தும்பைப்பூப் போல் துவைத்து, மெலிதாக நீலம் போட்டு, மூங்கில் கம்புகளுக்கு இடையே கட்டிய கொடிக்கயிற்றில் காயப் போட்டுவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டேன்.

பிறகு வந்து பார்த்தபோது வாசலில் காயப் போட்டிருந்த வேட்டியைக் காணோம். என்னவாயிற்று என்று தெரியவில்லை.

அன்று மாலைக்குள், என்னோடு பழகும் ஊர் மக்கள் சிலரிடையே, ஆசிரியரின் வேட்டியைக் காணவில்லை என்கிற செய்தி பரவி, பலவாறான கற்பனைகளை உற்பத்தி செய்துவிட்டது. அதிலே பெரும்பாலோர் சேர்ந்து சொன்ன கருத்து இதுதான்.

" சிகாமணிதான் எடுத்திருப்பான்!"

நான் குடியிருந்த வீட்டிற்கு அருகே இருந்த சேந்து கிணற்றில் இருந்து அப்பகுதி மக்கள் அடிக்கடி குடிநீர் முகந்து கொண்டு போவார்கள். அந்தக் கிணற்றின் எளிய அழகையும் அதன் தீஞ்சுவைத் தண்ணீரையும் விவரிப்பதற்கு, நான் பல வரிகள் எழுதவேண்டும்.

அன்றைக்குச் சிகாமணி, ஆறேழு குடங்கள் தண்ணீர் எடுப்பதற்காகப் பலமுறை எங்கள் வாசல் வழியே போய்வந்திருக்கிறான்.

பொதுவாகப் பத்து பத்தரை மணிக்கு மேல் கிராமத்தில் ஆள் அரவம் அதிகம் இருக்காது. பெரும்பாலும் கூலி வேலைக்குப் போய்விட்டிருப்பார்கள்.

சிகாமணியைப் பற்றி அறிந்த பலரும், அவன்தான் வேட்டியை எடுத்திருப்பான் என்று உறுதிபடக் கூறினார்கள்.

சிகாமணியின் தந்தை "பண்டுக்கிழவர்". அவரை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். வேலை இல்லாத நேரங்களில் அவரும் ஒரு மாதிரிதான். அவரது பழக்கம்தான் சிகாமணியைத் தொற்றிக்கொண்டது என்பது அவ்வூராரின் கணிப்புகளுள் ஒன்று. எல்லாவற்றையும் வாங்கிக் காதில் போட்டுக் கொண்டேன். கிராமிய வாழ்வை, ஒரு காவியம் பயில்வது போல் கற்றுக்கொண்டிருந்த காலம் அது!

ஒன்றை மட்டும் நான் குறித்து வைத்துக்கொண்டேன். சிகாமணியின் மகன் சகாதேவன், என்னிடத்தில் நான்காம் வகுப்பு பயில்கிற மாணவன். ஒல்லியாக, சிவப்பாகக் கொஞ்சம் உயரமாக இருப்பான்.

மறுநாள் காலை விடிகிற வரையில், வேட்டியின் மர்மம் விளங்கவில்லை. ஆனால், பள்ளிக்கூடம் வழக்கம் போல் இருக்கிறதே! போனேன், வகுப்பெடுத்தேன்.

அன்று செய்யுள் பகுதியில் திருக்குறள் வந்திருந்தது. பண்புடைமை என்கிற அதிகாரத்திலிருந்து இரண்டு குறள்கள்.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

என்னும் குறளை நான் நடத்த வேண்டியதாய் இருந்தது.

அந்தக் குறளை நிதானமாகப் படித்துக் காட்டி, அதற்குப் பொருள் சொல்லப் போனபோதுதான் எனக்கு அந்தப் பொறி தட்டியது.

"அன்புடையவர்களாயிருப்பதும் சிறந்த குடியில் பிறந்திருப்பதும் பண்புடைமை என்று சொல்லப்படும்."

இஃது அதன் பொருள்.

இதிலே, 'அன்புடைமை' யை என் மனம் ஒப்பியது. 'ஆன்ற குடிப்பிறத்தலில்' என்னமோ ஆழமாக நெருடியது.

சிறந்த குடியில் பிறப்பது என் கையிலா இருக்கிறது? நற்பண்பு இல்லாத பெற்றோருக்கு நான் மகனாகப் பிறந்திருக்கக்கூடும். அதனால், பிற நல்ல இலக்கணங்கள் பூண்டு, நான் பண்புடையவன் ஆக மாட்டேனா?

திருவள்ளுவர் எவ்வளவு பெரிய ஞானி! அவர் இப்படிப்பட்ட பொருளிலா அந்தக் குறளை வடித்திருப்பார்? இருக்காது.

அப்படியானால், இந்தக் குறளுக்கு நான் என்ன பொருள் கூற முடியும்?

ஆன்ற குடிப்பிறத்தல் என்றால், சிறந்த குடி உன்னிடமிருந்து பிறக்க வேண்டும் என்பதாக நான் பொருள் சொல்லத் துணிந்தேன். அதற்காக அத்தொடரை ஆன்றகுடிபிறத்தல் எனக்கொண்டு பொருள் கூறினேன்.

சிகாமணியின் மகன் சகாதேவன் நான் பாடம் நடத்தும்போது, அடிக்கடி என் கண்ணில் பட்டுக் கொண்டிருந்தான். அவன் என்னைக் கூர்ந்து நோக்குவதாகவே எனக்குத் தோன்றியது. அதில் நான் உற்சாகம் கொண்டேன். தொடர்ந்து திருக்குறளுக்கு விளக்கம் சொன்னேன். "அப்பன் திருடனாயிருக்கலாம், மகன் நல்லவனாக இருப்பான். அவங்க அப்பனைச் சொல், திருடன்தான்! அவன் பையனைச் சொல்லாதே, அவன் மிக நல்லவன்!" என்று உலகோர் பேசுவதைக் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா?"

மாணவர்கள் 'ஆம்' என்பதைப் போலத் தலையாட்டினார்கள்.

நான் தொடர்ந்து விளக்கமளித்தேன். இதற்கு எதிராகவும் இருப்பது உண்டு. 'அவனுடைய அப்பன் எவ்வளவு நல்லவன், இந்தப் பிள்ளை அவனுக்குப்போய் பிறந்திருக்கிறதே!' என்றும் மக்கள் கூறுவர். "உங்க அப்பன் திருடனா, அவனுடைய அப்பனாகிய உன் பாட்டனும் திருடனா? அந்தப் பழக்கம் அத்தோடு முடியட்டும். உன்னிலிருந்து திருடாதவன் என்னும் ஒரு புதியகுடி உதிக்கட்டும். ஒழுக்கம் இல்லாத



8th Std Tamil _20-12-2019.indd 81 03-01-2020 19:34:39

பரம்பரையில் நீ வந்திருந்தாலும் ஒழுக்கத்தின் உறைவிடமாக நீ இருக்க வேண்டும். உன் குடியின் பழைய பெயரில் உள்ள இழிவுகள் எல்லாம் நீங்கி, உன்னிலிருந்து பெருமை கொண்ட புதியகுடி பிறக்கட்டும். இதையே வள்ளுவர் ஆன்ற குடிப்பிறத்தல் என்று கூறுகிறார்" என விளக்கம் கூறி முடித்தேன்.

முத்தாய்ப்பாக, "அன்புடையவனாக இருத்தலும், குடும்பத்தின் வசை நீங்குமாறு ஒரு புதுத்தலைமுறை உன்னிலிருந்து தொடங்குவதும் பண்புடைமை என்று சொல்லப்படும்" என்று அந்தத் திருக்குறளுக்குப் பொருள் கூறினேன். நான் கூறி முடிப்பதற்கும் மதிய உணவு வேளைக்காகப் பள்ளி முடிவதற்கும் சரியாக இருந்தது.

இவ்வளவையும் நான் கூறியபோது சகாதேவனை நானும் என்னைச் சகாதேவனும் அடிக்கடி பார்த்துக்கொண்டோம். என் வேட்டி தொடர்பாக ஒருசொல் கூட நான் சொல்லவில்லை.

மதிய உணவிற்கு எங்கள் வீட்டிற்குச் சென்றேன். மனைவியார் தட்டெடுத்து வைத்து உணவு பரிமாறினார். நான் கைவைத்து இன்னும் பிசைய ஆரம்பிக்கவில்லை. அதற்குள் அவ்வூரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்னும் இளைஞன் எங்கள் வீட்டிற்குள் வந்தான். கைகளிரண்டையும் பின்னால் கட்டியிருந்தான்.

"என்னப்பா?" என்று கேட்டேன் நான்.

கிருஷ்ணமூர்த்தி பின்னால் கட்டியிருந்த கைகளை முன்னால் கொண்டு வந்தான்.

அவற்றில் என் வேட்டி இருந்தது.

"அடடே... என்னப்பா!" என்று என் வியப்பின் அளவு அதிகரிக்கக் கேட்டேன்.

"சகாதேவன் கொடுத்தான் சார்! அவங்க அப்பன் சிகாமணிதான் எடுத்துக்கொண்டு போய் அவங்க வீட்ல இருவாய்ச்சாலில் வைத்திருக்கிறான்! சகாதேவனுக்கு அது தெரிஞ்சிருக்குது! இன்னைக்குக் காத்தாலே நீங்க ஏதோ பாடம் நடத்தினீங்களாமே? அதக் கேட்டு, பள்ளிக்கூடம் விட்டு வந்தவன், என்னைக்கூப்பிட்டு, இந்தா வாத்தியார் வேட்டி! எங்கப்பாதான் கொணாந்து இருவாய்ச்சாலில் வச்சிருந்தாரு! நான் கொண்டு போய்க் கொடுக்க வெக்கமாயிருக்குது... நீ கொண்டு போய்க் கொடுத்துடண்ணான்னு சொல்லிச் சகாதேவன்தான் கொடுத்தான்!" என்று கூறிச் சிரித்தவாறு நின்றான் கிருஷ்ணமூர்த்தி.

எனக்கு ஒரே பூரிப்பு. வேட்டி கிடைத்த மகிழ்ச்சி மட்டும்தானா அது! உண்மையின் நாற்றொன்று ஊன்றி நடப்பட்டதோர் உற்சாகம் அது. "சொல்" எத்தனை சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்த தூய மகிழ்ச்சி அது. காலந்தோறும் சிஷ்யனுக்கும் குருவுக்கும் மத்தியில் நிகழும் ஒரு சுகானுபவத்தின் தொடர்ச்சி அது. "அப்பாடா! எல்லாம் நல்லபடி முடிந்தது" என்கிற வேளையில், வேறொரு பிரச்சினை முளைத்தது.

"இவனை இப்படியே விடக்கூடாது. வாத்தியார் வேட்டியையே திருடியிருக்கான் பாரேன்! வசமாகச் சிக்கினான். அவன் புள்ளையே அவனைக் காட்டிக் கொடுத்திட்டான்!" என்று ஆர்வத்தோடு பலர் அணிவகுத்தனர்.

நடக்கப் போகிற காரியம், காரியத்தின் பலன் எல்லாம் எனக்கு நன்கு புரிந்தது.



8th Std Tamil _20-12-2019.indd 82 03-01-2020 19:34:39

ஊரில் நியாயம் போட்டு, சிகாமணிக்கு ஐந்நூறோ ஆயிரமோ அபராதம் போடுவார்கள். கையில் பைசா இல்லை என்று சொன்னாலும் சிகாமணி கட்டித்தான் தீர வேண்டும். கொஞ்சம் வாய்தா தருவார்கள்.

ஆனால், நியாயத்திலிருந்து வீடு திரும்பும் சிகாமணி என்ன செய்வான்? போனவுடனே சகாதேவனைத்தான் முதுகில் நாலு சாத்து சாத்துவான்! "ஆனால், சகாதேவன் என்ன ஆவான்?" என்பதுதான் என் முதல் பிரச்சினையாக அன்று என்முன் நின்றது.

"நம்ம வாத்தியார் சொன்ன பாடம், நல்ல பாடம்னு நெனச்சோமே, இப்படி ஆயிடுச்சே!" என்று நினைப்பான். அப்போது அவன் முதுகு எரியும். குருவின் சொற்படி நடந்து, கண்ட பலன் இதுதான் என்று அவன் மனம் நம்பிக்கை இழக்கும். சேச்சே, இதற்கெல்லாம் இடம் கொடுக்கலாமா? நான் ஊராரைப் பார்த்துச் சொன்னேன்.

"அவங்க அப்பன் செய்தது தப்புன்னு தெரிஞ்சு, ஒரு நல்ல மகன் அதைச் சரியாக்கிட்டான். விஷயம் நல்லபடி முடிந்தது. இதுக்கும் மேலே இதை நீட்டிக்க வேண்டாம்! நீங்க சிகாமணிக்குப் போடற அபராதமெல்லாம் அவன் மகன் சகாதேவன் முதுகிலே அடியாத்தான் விழும். நாம செஞ்ச நல்ல காரியத்துக்கு இதுதானா பலன் என்று அவன் மனசு சோர்ந்து போகும்! இது வேண்டாம்!"

"இல்ல சார், அவனை விடக்கூடாது சார்!" என்று யாரோ கடைசிவரையில் சொன்னார்கள். அப்போது நான் ஒரே முடிவாகக் கூறினேன்."இதோ பாருங்க.. நீங்க ஊர் நியாயத்திலே சிகாமணி என் வேட்டியைத் திருடிட்டான்னு புகார் செஞ்சா, நான் என் வேட்டியே திருடு போகலைன்னு சாட்சியம் சொல்லுவேன்!" அந்த மக்களுக்கு இது புரிந்து, இறுதியில் என்னோடு உடன்பட்டார்கள். அதோடு, எல்லாம் முடிந்தது. சிகாமணியும் சகாதேவனும் நானும் தப்பித்தோம்.

**நூல் வெளி**

பி.ச. குப்புசாமி சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவர். இவர் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஜெயகாந்தனோடு நெருங்கிப்பழகி ஜெயகாந்தனோடு பல்லாண்டு என்னும் நூலை எழுதியுள்ளார். இவர் எழுதிய ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியனின் குறிப்புகள் என்னும் நூலிலிருந்து ஒரு பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

திருக்குறள் கருத்துகளை உணர்த்தும் கதைகளை அறிந்து வந்து வகுப்பில் பகிர்க.

## மதிப்பீடு

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.



8th Std Tamil _20-12-2019.indd 83 03-01-2020 19:34:39

கற்கண்டு

இயல் நான்கு

# வேற்றுமை

ZXTDC6

பாவை அண்ணன் பார்த்து, "அண்ணன் எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள். "இந்த அண்ணன் செய்ய முடிந்த உதவி என்றால் உறுதியாகச் செய்வேன்" என்றான் அண்ணன். "என் அண்ணன் உள்ளம் எனக்குத் தெரியும். என் அண்ணன் என் மீது மிகுந்த அன்பு உண்டு" என்றாள் பாவை.

மேலே உள்ள பகுதியைப் படித்துப் பாருங்கள். இதில் கூறப்பட்டுள்ள செய்தியைப் புரிந்துகொள்ள இயலாதவாறு ஒரு குழப்பம் உள்ளது அல்லவா?

இதே பகுதியைக் கீழே உள்ளவாறு படித்துப் பாருங்கள்.

பாவை அண்ணனைப் பார்த்து, "அண்ணா எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள். "இந்த அண்ணனால் செய்ய முடிந்த உதவி என்றால் உறுதியாகச் செய்வேன்" என்றான் அண்ணன். "என் அண்ணனது உள்ளம் எனக்குத் தெரியும். என் அண்ணனுக்கு என் மீது மிகுந்த அன்பு உண்டு" என்றாள் பாவை.

இப்போது எளிதாகப் பொருள் புரிகிறது அல்லவா?

இரண்டாம் பகுதியில் அண்ணன் என்னும் பெயர்ச்சொல் அண்ணனை, அண்ணா, அண்ணனால், அண்ணனுக்கு, என்றெல்லாம் மாற்றப்பட்டிருப்பதால் பொருள் தெளிவாக விளங்குகிறது. அண்ணன் என்னும் பெயர்ச்சொல்லுடன் ஐ, ஆல், கு, இன், அது போன்ற அசைகள் இணைந்து அச்சொல்லின் பொருளைப் பல்வேறு வகையாக வேறுபடுத்துகின்றன. இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறையை வேற்றுமை என்பர். இதற்காகப் பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் அசைகளை வேற்றுமை உருபுகள் என்று கூறுவர்.

## தெரிந்து தெளிவோம்

- சில இடங்களில் உருபுகளுக்குப் பதிலாக முழுச்சொற்களே வேற்றுமை உருபாக வருவதும் உண்டு. அவற்றைச் சொல்லுருபுகள் என்பர்.
- ஓவியர் தூரிகையால் ஓவியம் தீட்டினார். இதில் ஆல் என்பது வேற்றுமை உருபாக வந்துள்ளது.
- ஓவியர் தூரிகை கொண்டு ஓவியம் தீட்டினார். இதில் கொண்டு என்பது சொல்லுருபாக வந்துள்ளது.



8th Std Tamil _20-12-2019.indd 84 03-01-2020 19:34:39

### வேற்றுமையின் வகைகள்

வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ஆகியனவாகும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உண்டு.

**தெரிந்து தெளிவோம்**

வேற்றுமை உருபுகள் இடம் பெற்றுள்ள தொடர்களை வேற்றுமைத் தொடர்கள் என்பர். வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அஃது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.

### முதல் வேற்றுமை

பெரும்பாலான சொற்றொடர்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகிய மூன்று உறுப்புகள் இடம் பெற்றிருக்கும். எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும். முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் குறிப்பிடுவர்.

(எ.கா.) பாவை வந்தாள்.

### இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும்.

கபிலர் பரணரைப் புகழ்ந்தார். கபிலரைப் பரணர் புகழ்ந்தார்.

இவ்விரு தொடர்களையும் கவனியுங்கள். இரண்டாம் வேற்றுமை உருபு ( ஐ ) எந்தப் பெயருடன் இணைகிறதோ அப்பெயர் செயப்படுபொருளாக மாறிவிடுகிறது. இவ்வாறு ஒரு பெயரைச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் கூறுவர்.

இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வரும்

| | |
|---|---|
| ஆக்கல் | – கரிகாலன் கல்லணையைக் கட்டினான் |
| அழித்தல் | – பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார் |
| அடைதல் | – கோவலன் மதுரையை அடைந்தான் |
| நீத்தல் | – காமராசர் பதவியைத் துறந்தார் |
| ஒத்தல் | – தமிழ் நமக்கு உயிரைப் போன்றது |
| உடைமை | – வள்ளுவர் பெரும் புகழை உடையவர் |



8th Std Tamil _20-12-2019.indd 85 03-01-2020 19:34:39

### மூன்றாம் வேற்றுமை

ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய நான்கும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் ஆகும். இவற்றுள் ஆல், ஆன் ஆகியவை கருவிப்பொருள், கருத்தாப் பொருள் ஆகிய இரண்டு வகையான பொருள்களில் வரும். கருவிப் பொருள் முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

கருவியே செய்யப்படும் பொருளாக மாறுவது முதற்கருவி – மரத்தால் சிலை செய்தான். ஒன்றைச் செய்வதற்குத் துணையாக இருப்பது துணைக்கருவி – உளியால் சிலை செய்தான்.

கருத்தாப்பொருள் ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இருவகைப்படும். பிறரைச் செய்யவைப்பது ஏவுதல் கருத்தா – கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது. தானே செய்வது இயற்றுதல் கருத்தா – சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது. ஆன் என்னும் உருபு பெரும்பாலும் செய்யுள் வழக்கில் இடம்பெறும். (எ.கா.) புறந்தூய்மை நீரான் அமையும்.

ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். (எ.கா.) தாயொடு குழந்தை சென்றது. அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

### நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமைக்கு உரிய உருபு கு என்பதாகும். இது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருள்களில் வரும்.

கொடை – முல்லைக்குத் தேர் கொடுத்தான்.

பகை – புகை மனிதனுக்குப் பகை.

நட்பு – கபிலருக்கு நண்பர் பரணர்.

தகுதி – கவிதைக்கு அழகு கற்பனை.

அதுவாதல் – தயிருக்குப் பால் வாங்கினான்.

பொருட்டு – தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

முறை – செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ.

எல்லை – தமிழ்நாட்டுக்குக் கிழக்கு வங்கக்கடல்.

**தெரிந்து தெளிவோம்**

நான்காம் வேற்றுமை உருபுடன் கூடுதலாக ஆக என்னும் அசை சேர்ந்து வருவதும் உண்டு.
(எ.கா.) கூலிக்காக வேலை

### ஐந்தாம் வேற்றுமை

இன், இல் ஆகியவை ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும். இவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருள்களில் வரும்.

நீங்கல் – தலையின் இழிந்த மயிர்.

ஒப்பு – பாம்பின் நிறம் ஒரு குட்டி.

எல்லை – தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல்.

ஏது – சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்.



8th Std Tamil _20-12-2019.indd 86 03-01-2020 19:34:39

### ஆறாம் வேற்றுமை

*அது, ஆது, அ* ஆகியவை ஆறாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.

இவ்வேற்றுமை, உரிமைப் பொருளில் வரும். உரிமைப் பொருளைக் கிழமைப் பொருள் என்றும் கூறுவர்.

(எ.கா.) இராமனது வில். நண்பனது கை.

ஆது, அ ஆகிய உருபுகளை இக்காலத்தில் பயன்படுத்துவது இல்லை.

### ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபு **கண்.** மேல், கீழ், கால், இல், இடம் போன்ற உருபுகளும் உண்டு.

இடம், காலம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களில் ஏழாம் வேற்றுமை உருபு இடம்பெறும். (எ.கா.) எங்கள் ஊரின்கண் மழை பெய்தது. இரவின்கண் மழை பெய்தது.

**தெரிந்து தெளிவோம்**

இல் என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் உண்டு. நீங்கல் பொருளில் வந்தால் ஐந்தாம் வேற்றுமை என்றும் இடப் பொருளில் வந்தால் ஏழாம் வேற்றுமை என்றும் கொள்ள வேண்டும்.

### எட்டாம் வேற்றுமை

இது விளிப்பொருளில் வரும். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம். இவ்வேற்றுமைக்கு என்று தனியே உருபு கிடையாது. பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு. அண்ணன் என்பதை அண்ணா என்றும் புலவர் என்பதைப் புலவரே என்றும் மாற்றி வழங்குவது எட்டாம் வேற்றுமை ஆகும்.

**வேற்றுமை உருபுகளும் அவற்றின் பொருள்களும்**

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் |
|---|---|---|---|
| முதல் (எழுவாய்) | இல்லை | ஆனவன், ஆவான், ஆகின்றவன் | பயனிலை ஏற்றல் |
| இரண்டாம் | ஐ | இல்லை | செயப்படுபொருள் |
| மூன்றாம் | ஆல், ஆன், ஒடு, ஓடு | கொண்டு, வைத்து, உடன், கூட | கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி |
| நான்காம் | கு | ஆக, பொருட்டு, நிமித்தம் | கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை |
| ஐந்தாம் | இல், இன் | இலிருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும் | நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது |
| ஆறாம் | அது, ஆது, அ | உடைய | கிழமை |
| ஏழாம் | கண் | | இடம், காலம் |
| எட்டாம் (விளி) | இல்லை | இல்லை | விளி (அழைத்தல்) |



8th Std Tamil _20-12-2019.indd 87 03-01-2020 19:34:40

## கற்பவை கற்றபின்

பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள ஒரு பத்தியைத் தேர்ந்தெடுத்து, அதிலுள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுதி வகைப்படுத்துக.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது _________ ஆகும்.

   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை

2. எட்டாம் வேற்றுமை ___________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.

   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை

3. உடனிகழ்ச்சிப் பொருளில் _____________ வேற்றுமை வரும்.

   அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

4. 'அறத்தான் வருவதே இன்பம்' - இத்தொடரில் ________ வேற்றுமை பயின்று வந்துள்ளது.

   அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) ஆறாம் ஈ) ஏழாம்

5. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ________ பொருளைக் குறிக்கிறது.

   அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

**பொருத்துக.**

1. மூன்றாம் வேற்றுமை – இராமனுக்குத் தம்பி இலக்குவன்.
2. நான்காம் வேற்றுமை – பாரியினது தேர்.
3. ஐந்தாம் வேற்றுமை – மண்ணால் குதிரை செய்தான்.
4. ஆறாம் வேற்றுமை – ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்.

**சிறுவினா**

1. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
2. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
3. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?



8th Std Tamil _20-12-2019.indd 88 03-01-2020 19:34:40

## மொழியை ஆள்வோம்!

PR22QX

**கேட்க.**

கல்வியின் சிறப்புகளை விளக்கும் கதைகளைக் கேட்டு மகிழ்க.

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

கல்வியே அழியாச் செல்வம்.

**சொல்லக் கேட்டு எழுதுக.**

தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த ஒரு நூல்; தமிழுக்கு வாழ்வியல் உண்மைகளை உணர்த்தும் ஒரு நூல்; தன் தோற்றத்தால் தமிழ்நாட்டுக்கு உலகப் பெரும் புகழைப் பெற்றுத்தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள். திருக்குறள் பற்றிப் பேசாத புலவர் இலர்; எழுதாத அறிஞர், எழுத்தாளர் இலர். பள்ளிப் பருவத்திலும் திருக்குறள் படிக்கப்படுகின்றது. பருவம் வளரவளர அதுவும் நுட்பமாகக் கற்கப்படுகின்றது. திருக்குறளுக்குரிய சிறப்பே அதுதான். அஃது எல்லாப் பருவத்தாருக்கும் வேண்டிய விழுமிய நூல். எனவே திருக்குறளில்லாத வீடும் இருக்கக் கூடாது! திருக்குறள் படிக்காத தமிழரும் இருக்கக் கூடாது.

**கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | தேன் | மலர் | செம்மை | சிட்டு | கனி |
| குருவி | இலை | காய் | கூடு | முட்டை | மரம் |

**அறிந்து பயன்படுத்துவோம்.**

### நிறுத்தக்குறிகள்

**காற்புள்ளி ( , )**

1. பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும்.
   (எ.கா) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐந்திணைகள்.
2. கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும். (எ.கா.) அன்புள்ள நண்பா,
3. வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) பொழிலன் தோட்டத்திற்குச் சென்று, வாழை இலை பறித்து வந்தான்.
4. மேற்கோள் குறிகளுக்கு (") முன் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) குழந்தை நிலவைப் பார்த்து," நிலா நிலா ஓடி வா" என்று பாடியது.
5. முகவரியில் இறுதி வரி நீங்க ஏனைய வரிகளின் இறுதியில் காற்புள்ளி வரும்.
   (எ.கா.) ச. ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு, திருவள்ளூர்.



8th Std Tamil _20-12-2019.indd 89 03-01-2020 19:34:40

### அரைப்புள்ளி ( ; )

1. ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் அரைப்புள்ளி வரும். (எ.கா.) கரிகாலன் கங்கை வரை படையெடுத்துச் சென்றான்; கனக விசயருடன் போரிட்டான்.

2. உடன்பாடு, எதிர்மறைக் கருத்துகளை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும். (எ.கா.) நல்லவன் வாழ்வான்; தீயவன் தாழ்வான்.

### முக்காற்புள்ளி ( : )

சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முக்காற்புள்ளி வரும்.

(எ.கா.) முத்தமிழ் : இயல், இசை, நாடகம்.

### முற்றுப்புள்ளி ( . )

1. சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும். (எ.கா.) கல்வியே மனிதனின் வாழ்வை உயர்த்தும்.

2. சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.

   (எ.கா.) திரு. வி. க.    மா. க. அ.    ஊ. ஒ. ந. நி. பள்ளி

3. பெயரின் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.

   (எ.கா.) நெ. து. சுந்தரவடிவேலு

### வினாக்குறி ( ? )

வினாப்பொருளை உணர்த்தும் வாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இட வேண்டும். (எ.கா.) சேக்கிழார் எழுதிய நூல் எது?

### வியப்புக்குறி ( ! )

மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் முதலான உணர்ச்சியை வெளியிடும் இடங்களில் வியப்புக்குறி இட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | தமிழின் இனிமைதான் என்னே! | – | வியப்பு |
| | பாம்பு! பாம்பு! | – | அச்சம் |
| | அந்தோ! இயற்கை அழிகிறதே! | – | அவலம் |

### ஒற்றை மேற்கோள் குறி ( ' ' )

தனிச் சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும்போதும், இரட்டை மேற்கோள் குறியில் இன்னொரு கூற்று உட்பட்டு வரும்போதும் ஒற்றை மேற்கோள் பயன்படும்.

(எ.கா.) 'நல்ல' என்பது குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

கூட்டத்தின் தலைவர், "அறிஞர் அண்ணா அவர்கள் இப்போது 'தலைப்பில்லை' என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.



8th Std Tamil _20-12-2019.indd 90    03-01-2020 19:34:40

### இரட்டை மேற்கோள் குறி ( "   " )

நேர்கூற்றுகளிலும் செய்யுள் அடிகளையோ பொன்மொழிகளையோ குறிப்பிடும் இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறியைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) திரு. வி. க. மாணவர்களிடம்," தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்" என்று கூறினார்.

### பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

1. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்
2. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது
3. தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது
4. கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்
5. திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது

### பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

நூல் பல கல் என்பர் பெரியோர் அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா முடியாது நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகம் ஆகும். நூலகத்தின் வகைகளாவன மையநூலகம் மாவட்ட நூலகம் கிளை நூலகம் ஊர்ப்புற நூலகம் எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன் என்றார் நேரு ஆகவே நூலகத்தின் பயன் அறிவோம் அறிவு வளம் பெறுவோம்

### கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




1. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

### கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

**நூலகம்**

முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை.



8th Std Tamil _20-12-2019.indd 91 03-01-2020 19:34:40

## மொழியோடு விளையாடு

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகளைக் கட்டத்தில் நிரப்புக. வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக. எழுத்துகளை முறைப்படுத்திக் கல்வி பற்றிய பழமொழியைக் கண்டறிக.

1. திரைப்படப் பாடலாசிரியர் சோமுவின் ஊர். 2. கேடில் விழுச்செல்வம் ____.
3. குமர குருபரர் எழுதிய நூல்களுள் ஒன்று.
4. 'கலன்' என்னும் சொல்லின் பொருள்.
5. ஏட்டுக்கல்வியுடன் ________ கல்வியும் பயில வேண்டும்.
6. திரு.வி.க. எழுதிய நூல்களுள் ஒன்று. 7. மா + பழம் என்பது _____ விகாரம்.

1.

| | | | | |
|---|---|---|---|---|
| ○ | | | | டி |

2.

| | | |
|---|---|---|
| | ○ | வி |

3.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நெ | ○ | | | | | |

4.

| | | | | |
|---|---|---|---|---|
| ○ | ணி | | | |

5.

| | | | |
|---|---|---|---|
| | | ○ | கை |

6.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | | | ○ | | | |

7.

| | | | |
|---|---|---|---|
| | ன் | ○ | |

வட்டத்தில் சிக்கிய எழுத்துகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

பழமொழி : ____________________________________________

## நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. நாள்தோறும் ஒரு திருக்குறள் கற்பேன்.
2. அனைவரிடமும் அன்பு கொண்டு வாழ்வேன்.

### கலைச்சொல் அறிவோம்.

| | | | |
|---|---|---|---|
| நிறுத்தக்குறி | – *Punctuation* | மொழிபெயர்ப்பு | – *Translation* |
| அணிகலன் | – *Ornament* | விழிப்புணர்வு | – *Awareness* |
| திறமை | – *Talent* | சீர்திருத்தம் | – *Reform* |

## இணையத்தில் காண்க

திரு.வி.க. எழுதிய நூல்களின் விவரங்களை இணையத்தில் தேடி எழுதுக.



8th Std Tamil _20-12-2019.indd 92 03-01-2020 19:34:40